## 1. கூட்டத்தின் தொடக்கத்தில் சொல்ல வேண்டிய செபங்கள் : (அனைவரும் பக்தியுடன் செபிக்கவும்)

முதல்வர் : தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே,

அனை : ஆமென்

முதல் : தூய ஆவியே எழுந்தருளி வாரும்; உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களை நிரப்பும். அவைகளில் அன்பின் நெருப்பை மூட்டியருளும்; உமது ஆவியை அனுப்பியருளும் ஆண்டவரே. அவரால் அவை படைக்கப்படும்.

அனை : அதனால் உலகின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

**செபிப்போமாக:**

முதல் : தந்தையாம் இறைவா! உமது தூய ஆவியின் கொடைகளை உலகின் மேல் பொழிந்தருளும். நற்செய்தியை போதிக்க துவங்கிய காலத்தில் உமது திருச்சபையின் மேல் உமது ஆவியை பொழிந்தீரே, இக்காலத்தில் அதே ஆவியானவர், விசுவசிக்கும் அனைத்து உள்ளங்களின் மூலமாக, செயல்பட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக மன்றாடுகிறோம்.

அனை : ஆமென்.

முதல் : ஆண்டவரே நீர் என் இதழ்களைத் திறந்தருளும்.

அனை : என் நா உம்மைப் புகழக் கடவது.

முதல் : இறைவா நீர் எனக்கு உதவியாக வாரும்.

அனை : ஆண்டவரே நீர் எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்.

முதல் : தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமையுண்டாவதாக

அனை : ஆதியிலே இருந்ததுபோல் ....
(இதன்பின் செபமாலையின் ஐந்து பத்து செபம் சொல்ல வேண்டும்)
**(கிருபை தயாபத்து செபம்......)**

முதல் : இயேசுகிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி ஆகுவதற்காக

அனை : இறைவனுடைய தூய மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

---

**செபிப்போமாக**

முதல் : ஒ இறைவா, உமது ஒரே குமாரனின் வாழ்வினாலும் மரணத்தாலும் உயிர்ப்பினாலும் நித்திய இரட்சணியப் பேறுபலன்களை எங்களுக்குப் பெற்றுத் தந்தருளினீரே, தூய கன்னிமரியாவின் தூய செபமாலையில் அடங்கியுள்ள இப்பரம இரகசியங்களைத் தியானித்து அவைகளில் உள்ளவைகளை நாங்கள் கண்டு பாவிக்கவும், அவைகள் வாக்களிப்பதை நாங்கள் அடையவும் தயை செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாக உம்மைப் பார்த்து மன்றாடுகிறோம்.

அனை : ஆமென்.

முதல் : இயேசுவின் மிகவும் தூய இருதயமே.

அனை : எங்கள் மேல் இரக்கமாயிரும்

முதல் : மரியாயின் மாசற்ற இருதயமே

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

முதல் : தூய யோசேப்பே

அனை ; எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

முதல் : நற்செய்தியாளரான தூய யோவானே

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

முதல் : தூய லூயி மரி தெமோன் போர்தே,

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்
தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே [redacted] .... ஆமென்.

## 2. சேனையின் சங்கிலி செபம்

(இது கூட்ட நிகழ்ச்சிகளின் நடுவில் எழுந்து நின்று சொல்ல வேண்டிய செபம். ஒவ்வொரு சேனையாரும் நாள்தோறும் இதைச் சொல்ல வேண்டும்)

எல்லோரும் (தொடக்கவுரை) :

"வைகறை போல் தோற்றம்; திங்களைப்போல் அழகு;
ஞாயிறு போல் ஒளி; போரணி போல் வியப்பார்வம்;
யாரிவள்!" (இ.பா. 6:10)

முதல் : ஆண்டவரை எனது உள்ளம் ✝ (தந்தை, மகன்.... அடையாளம் இடவும்)
போற்றிப் பெருமைப் படுத்துகின்றது.

அனை : என் மீட்பராம் கடவுளை நினைத்து
எனது மனம் பேருவகை கொள்கின்றது.

முதல் : ஏனெனில் அவர்தம் அடிமையின்
தாழ்நிலையைக் கண்ணோக்கினார்.
இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும்
என்னைப் பேறுபெற்றவர் என்பர்.

அனை : ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும்
செயல்கள் செய்துள்ளார்
தூயவர் என்பதே அவரது பெயர்.

முதல் : அவருக்கு அஞ்சி நடப்போருக்குத்
தலைமுறை தலைமுறையாய்
அவர் இரக்கம் காட்டி வருகிறார்.

அனை : அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்;
உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச்
சிதறடித்து வருகிறார்.

முதல் : வலியோரை அரியணையினின்று
தூக்கி எறிந்துள்ளார்.
தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.

அனை : பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்;
செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்

முதல் : மூதாதையருக்கு உரைத்தபடியே
அவர் ஆபிரகாமையும் அவர் தம் வழி மரபினரையும்
என்றென்றும் இரக்கத்தோடு
நினைவில் கொண்டுள்ளார்.

தலை : தம் ஊழியராகிய இஸ்ரேலுக்குத்
துணையாக இருந்து வருகிறார்

முதல் : தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும்
மகிமை உண்டாவதாக

அனை : தொடக்கத்தில் இருந்தது போல் இப்பொழுதும்
எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எல்லோரும் "வைகறை போல் தோற்றம்; திங்களைப் போல் அழகு;
ஞாயிறு போல் ஒளி; போரணி போல் வியப்பார்வம்; யாரிவள்!"

முதல் : சென்மப் பாவமின்றி உற்பவித்த மரியாயே,

அனை : உம்மை நாடிவரும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

### செபிப்போமாக

முதல் : எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே, தந்தையிடம் எங்களுக்காக பரிந்து பேசுபவரே, உமது தாயாகிய மிகவும் பரிசுத்த கன்னிகையை எங்களுக்கும் தாயாகவும், உம்மிடம் எங்களுக்காகப் பரிந்து பேசுகிறவராகவும், நியமிக்கத் திருவுளமானீரே, உம்முடைய வரங்களைத் தேடி உம்மை நாடி வருபவர்கள் அனைவரும் அவள் மூலமாய் அவற்றைப் பெற்று மகிழுமாறு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அனை : ஆமென்.

## சேனைக் கூட்ட முடிவு செபம்

(இது கூட்டத்தின் முடிவில் முழந்தாளிட்டுச் சொல்ல வேண்டிய செபம். எளிதில் படிக்கக் கூடிய வகையில், இச்செபம் அமைக்கப் பெற்றிருக்கின்றது)

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே.... ஆமென்.

கடவுளின் தூய அன்னையே, இதோ உம்மிடம் அடைக்கலம் தேடி வருகிறோம். எங்கள் தேவைகளில் நாங்கள் உமக்கு ஒப்புக் கொடுக்கும் மன்றாட்டுக்களைப் புறக்கணியாதேயும், மாட்சிமை பொருந்திய ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையே, எல்லா ஆபத்துக்களினின்றும் எப்பொழுதும் எங்களைப் பாதுகாத்தருளும்.

முதல் : (பிரசீடியத்தின் பெயரைக் கன்னித்தாயின் பெயரோடு இணைத்துச் சொல்லவும்)

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
(பிரசீடியக் கூட்ட நேரத்தைத் தவிர்த்து வேறு நேரங்களில் உறுப்பினர்கள் பின்வருமாறு சொல்லவும்)

முதல் : எல்லா அருள் வரங்களின் மத்தியஸ்தியாகிய அமலோற்பவ மரியே

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

முதல் : தூய மிக்கேலே, தூய கபிரியேலே,

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

முதல் : வானுலக வல்லமைகள் அனைத்துமே, மரியாவின் வன தூதர்களின் சேனையே.

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

முதல் : தூய திருமுழுக்கு யோவானே

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

முதல் : பேதுரு, பவுல் என்னும் புனிதர்களே,

அனை : எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்,
(கீழ்க்கண்ட செபத்தை துவக்கமுதல் ஆமென் வரை எல்லோரும் சேர்ந்து சொல்ல வேண்டும். அதன் பிறகு உள்ள பகுதியை குரு மட்டும் சொல்லுவார்)

### செபிப்போமாக

எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே,
மரியன்னையின் கொடியின் கீழ் போர் புரியும் எங்களுக்கு
உம் மீது குறைவற்ற விசுவாசத்தையும்
உமது அன்னையின் மீது நிறை நம்பிக்கையும் தந்து
உலகத்தை வெல்லுமாறு வல்லமை அளித்தருளும்.
எங்கள் செயல்கள் அனைத்தையும்
உம்மீதுள்ள அன்பிற்காக மட்டும் செய்யவும்
எங்கள் அயலாரில் உம்மையேக் கண்டு உமக்கே பணி புரியவும்
இறை அன்பா ஊக்கம் பெற்ற உயிருள்ள விசுவாசத்தைத் தந்தருளும்.
வாழ்க்கையில் நேரிடும் சிலுவைகளிலும், வருத்தங்களிலும், ஏமாற்றங்களிலும்,
நாங்கள் மனந்தளராமல் அமைதியாக இருக்க
கற்பாறை போன்ற உறுதியான, அசைக்க முடியாத விசுவாசத்தைத் தந்தருளும்.
கடவுளுக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும்,
பெருங்காரியங்களைத் தயக்கமின்றித் தொடங்கவும், தொடர்ந்து செய்யவும்,
துணிவுள்ள விசுவாசத்தை எங்களுக்குத் தந்தருளும்.
நாங்கள் ஒற்றுமையுடன் முன்னேறிச் செல்லவும்
இறை அன்பின் நெருப்பை எங்கும் எரியச் செய்யவும்
இருளிலும் சாவின் நிழலிலும் இருப்பவர்களுக்கு ஞான ஒளி தரவும்
ஆர்வமற்றவர்களுக்கு ஊக்கம் ஊட்டவும்

பாவத்தால் ஆன்ம உயிர் இழந்தவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுக்கவும்,
சமாதானத்தின் வழியில் நாங்களே அடிசறுக்காமல் நடந்து செல்லவும்
எங்களுக்கு நெருப்புத்தூண்போல் துணைபுரியும் விசுவாசத்தைத் தந்தருளும்.
இவ்வாறு வாழ்க்கை என்னும் போராட்டம் முடிவடைந்தப் பிறகு
எங்கள் சேனை முழுவதும் அதன் உறுப்பினர் ஒருவரையும் இழக்காமல்
உமது அன்பும் மாட்சியும் விளங்கும் நித்திய பேரின்ப நாட்டில்
உமது முன்னிலையில் மீண்டும் அணிவகுத்து நிற்க
அருள் புரிந்தருளும் ஆண்டவரே, ஆமென்.

முதல் : இறந்த நம் சேனையர் ஆன்மாக்களும்
இறந்த விசுவாசிகள் அனைவரின் ஆன்மாக்களும்,
கடவுள் இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவனவாக ஆமென்.

(பிறகு குரு தம் ஆசீர் வழங்குகிறார். குரு இல்லையெனில் தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே. ஆமென். சொல்லவும்)